y-MCA


விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 தை 13 றஜப் 9 இதழ்: 275

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 26-1-1991


## வீதிமறியல் செய்வதற்கு அ.தி.மு.க. காங்கிரஸ் முடிவு!

### 7000 தொண்டர்கள் கைது

(சென்னை)

தமிழகத்தில் தி.மு.க. அரசின் நடவடிக்கைகளை எதிர்த்து காங்கிரஸ், அண்ணா தி.மு.க. ஆகிய கட்சிகள் கூட்டாக எதிர்வரும் திங்கட்கிழமை காலை வீதிமறியல் போராட்டம் செய்யத் தீர்மானித்துள்ளன.

தி.மு.க. அரசானது காங்கிரஸ், அண்ணா தி.மு.க. தொண்டர்களை தமிழகம் முழுவதும் பரவலாகக் கைது செய்து வருவதாக வாழப்பாடி இராமமூர்த்தி கண்டனம்

[4-ம் பக்கம் பார்க்க]

## தி.மு.க. ஆட்சியை கலைக்க கோரிக்கை!

[சென்னை]

நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைகுலைத்த தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டுமென காங்கிரஸ் உறுப்பினர் ஜனுப் அக்பர் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசு பிரிவினைவாதிகளுக்கு ஆதரவு வழங்குவதாக அவர் குற்றம் சாட்டி

(4-ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க நேசப்படைகளினால்

# 3 ஈராக் கப்பல்கள் மூழ்கடிப்பு

# படையினர் பலி 59 பேர் கைது

## 90, 000 அகதிகள் ஈரானில் தஞ்சம்

(பாக்தாத்)

அமெரிக்க நேசநாட்டுப் படைகள், வளைகுடாப் பகுதியில் மூன்று ஈராக் யுத்தக் கப்பல்களை மூழ்கடித்துள்ளன. இத்தாக்குதலில் 3 ஈராக் படையினர் பலியானதுடன் 59 பேர் சிறைப்பிடிக்கப்பட்டனர்.

வளைகுடா யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து ஈராக்கிலிருந்து இதுவரை 90, 000 அகதிகள் ஈரான் எல்லைக்குள் வந்துள்ளதாக ஈரான் அறிவித்துள்ளது.

வளைகுடா யுத்தம் தொடர்பாக ஐ. நா. பாதுகாப்புசபையின் கூட்டத்தை தொடர்ச்சியாக நடாத்தவேண்டும் என்ற இந்தியாவின் யோசனை சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நேற்று சபையின்முதலாவது கூட்டம் நடைபெற்றது.

ஒருவாரகாலபோருக்கு பின்னர், 600 யுத்த விமானங்களுடனும், 200 ஹெலிகொப்டர்களுடன் ஈராக் பெரும் போருக்குதயாராகி வருகிறது.

இதேசமயம் யுத்தம் பல

(4-ம் பக்கம் பார்க்க)

## நிர்ணயிக்கப்பட்ட விலையில் மண்ணெண்ணை, சீனி சவர்க்காரம் விற்பனை

[யாழ்ப்பாணம்]

கந்தர்மடம் பலாலி வீதியில் ஒருவருக்கு ஒரு லீற்றர் மண்

(4-ம் பக்கம் பார்க்க)

## படையினரால் ஒன்பது தமிழர் சுட்டுக்கொலை

[அம்பாறை]

அம்பாறை மாவட்டத்தில் கடந்த 22-ம் திகதி விசேட அதிரடிப்படையினரால் 9 அப்பாவித்தமிழர் கைது செய்யப்பட்டு சித்திரவதையின் பின்னர் சுட்டுக்கொல்லப்பட்டனர். (வி-க)

## போலியோ முக்கூட்டு ஊசிமருந்து நிறுத்தம்

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்தியசாலையில் சிறுபிள்ளைகளுக்கு ஏற்றப்படும் போலியோ முக்கூட்டு ஊசிமருந்து நேற்று முதல் நிறுத்தப்பட்டுள்ளது

இந்த மருந்து வகைகள் கையிருப்பிலில்லாத காரணத்தினாலே நிறுத்திவைக்கப்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறுபிள்ளைகளுக்கு 3-ம், 5-ம்

(4ம் பக்கம் பார்க்க)

## "புலிகள் பற்றி ரகசியம் எதுவும் பிரதமர் என்னிடம் சொல்லவேயில்லை" -கருணாநிதி

(சென்னை)

"விடுதலைப்புலிகள் சம்பந்தமான எந்த ஒரு ரகசியத்தையும், பிரதமர் சந்திரசேகர் எனக்குத் தெரிவிக்கவுமில்லை நானும் எந்த ஒரு ரகசியத்தையும், யாழ்ப்பாணத்துக்கு அனுப்பவுமில்லை"

இவ்வாறு தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்று தமிழ்நாடு சட்டசபையில்

(4ம் பக்கம் பார்க்க)

## கல்வியதிகாரி கைது

[திருமலை]

திருமலையில் கல்வி அதிகாரியான திரு தங்கராசா இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (வி-க)

## பதுக்கல் மண்ணெண்ணெய்

(நாவற்குழி)

சாவகச்சேரியில் பதுக்கி வைத்து நிறம் மாற்றி விற்பனைக்காகக் கொண்டு செல்லப்பட்ட 3 பரல் மண்ணெண்ணெய் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. (107)

## நிதி சேகரித்த நால்வர் புலிகளிடம் சிக்கினர்!

[தென்மராட்சி]

தவறான தகவலைக்கூறிதென் தமிழீழ அகதிக்கென நிதிசேகரிப்பிலிடுபட்டவர்கள் விடுதலைப் புலிகளிடம்சிக்கிக்கொண்

(4-ம் பக்கம் பார்க்க)

## விமான தாக்குதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுப் முதிதையன்கட்டுப் பகுதியில் நேற்று 3 விமானங்கள் மேற்

(3-ம் பக்கம் பார்க்க)

## 4ம் கட்ட நிவாரணம்

# திங்கள் முதல் ஆரம்பம் அரிசி வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள சகலருக்குமான 4ம் கட்ட விசேஷ இலவச உலர் உணவுப் பொருள் வழங்கல் இம் மாதம் 28ந் [illegible] திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

4ம் கட்ட விசேஷ இலவச உணவுப் பொருள் விநியோகத்திற்கு இம்முறை அரிசி வழங்கப்படவுள்ளது. (153)

## முதலாம் கட்ட உலர் உணவு

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, துணுக்காய், மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இதுவரை முதலாம் கட்ட உலர் உணவு மட்டுமேவழங்கப்பட்டுள்ளது.

## படையினரின் நிர்ப்பந்தம்: பயணிகள் சூடமேற்றி தேவாரம் பாடினர்!

(மானிப்பாய்)

கொழும்பிலிருந்து கற்பூரம் கொண்டுவந்த சிலர் வவுனியாவில் அதைக் கொழுத்தி தேவாரம் பாடிய பின்பே யாழ்ப்பாணம் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இதுபற்றி தெரிவிக்கையில் கடந்த வாரம் கொழும்பிலிருந்து பல அத்தியா (4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### பாலாஜி புத்தகசாலை

ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் பாடசாலை புத்தக உபகரணங்கள், ராணிமுத்து, ராணி காமிக்ஸ் நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம். 15/6 முதலாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-4289)

### பழைய புத்தகங்கள்

பழைய புத்தகங்கள், கொப்பி, பத்திரிகை, கோழித்தீன், சீமெந்து உறை, உரைப்பை, பித்தளை, செப்பு வாங்கப்படும் விற்கப்படும். சேனாதிராசா Second Hand Book House 57, ஸ்ரான்லி வீதி, புரசொலி இலங்கை வங்கிக்கு முன்லேன் யாழ்ப்பாணம். (சி-4287)

### ஒப்செட் கலண்டர்கள்

கடவுள் படங்கள், குழந்தைகள், படங்கள், சினிமா படங்கள் கண்ணைக் கவரும் வர்ணங்களில் லித்தோவில் அச்சிடப்பட்ட 1991-ம்ஆண்டு மாதக் கலண்டர்கள் விற்பனையாகின்றன. (மீரா வெளியீடுகளும்) வியாபாரிகளுக்கு கழிவுண்டு. மாக்மிலன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். (சி-4291)

### விற்பனைக்கு

விவசாயிகள் தமக்குத் தேவையான கத்தரி, மிளகாய், கோவா போன்ற மரக்கறி நாற்றுக்களையும் மரக்கறி விதைகளையும் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற ஸ்ரீராம் விவசாயப் பண்ணையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். திரு. தே. வரதராசா சிவஐங்கரன் விவசாய விற்பனை நிலையம் அராலி மேற்கு வட்டுக்கோட்டை. (சி-4290)

### ஜோதிடம்

தற்போது சனி, ராகு, கேது, வியாழன் நேரக்கோட்டின் கெட்ட சஞ்சாரமும், 7 மாத யுத்தச் செவ்வாயின் 22-3-91 வரை வக்கிரமும், வளைகுடாப் போரால் இலங்கை உட்பட உலகில் அனர்த்தங்களை உண்டாக்கும். ஜோதிட நூல்களுக்கு: PROF: சத்தியதாஸன் ஞானம் ஸ்ரோர்ஸ் சித்தன் கேணி. (சி-4284)


பூநகரியூடாக

## போக்குவரத்து நிறுத்தப்பட்டது

[பூநகரி]

வவுனியா இராணுவ தடை முகாமில் பயணிகளுக்கு ஏற்பட்டுவரும் துன்புறுத்தல் காரணமாக யாழ். மாவட்டத்திலிருந்து, பூநகரியூடாக வவுனியாவுக்கான மினி பஸ் போக்குவரத்துச் சேவை 21-ம் திகதிமுதல் மறு அறிவித்தல் வரைதற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. [23]

# செஞ்சிலுவை லொறி மீது ஹெலி தாக்குதல்

(வவுனியா)

மடுத்தேவாலயத்தில் இருக்கும் அகதிகளுக்கு உணவுப் பொருட்களை கொழும்பிலிருந்து ஏற்றிவந்த சர்வதேச செஞ்சிலுவைச்சங்க லொறியொன்றின்மீது பெரிய தம்பனையில்வைத்து இருஹெலிகள் கடும் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதில் லொறியும், உணவுப் பொருட்களும் முற்றாகச் சேதமடைந்தன.

இதேநேரத்தில் பூநகரிப் பகுதிகளிலும் ஹெலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் கூறப்படுகின்றது. (வி)

## பதுக்கல் பொருட்கள்

[கொக்குவில்]

திருநெல்வேலி, கொக்குவில், குளப்பிட்டி ஆகிய பகுதிகளில் நேற்றுக்காலை பதுக்கிவைக்கப்பட்டிருந்த மண்ணெண்ணை சவர்க்காரம் ஆகியன நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் விற்பனைக்கு விடப்பட்டது. [135]

## பாணின் விலை எட்டரை ரூபா

(நாவற்குழி)

சாவகச்சேரியில் 14 ரூபாவாக விற்கப்பட்ட 350 கிறாம் பாண் இனிமேல் 8 ரூபா 50 சதமாக விற்கவேண்டும் என சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கம் தீர்மானித்துள்ளது. (107)

## ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தாபகரும், முன்னாள் தலைவருமான அமரர் ச. ஞானப்பிரகாசத்தின் நினைவு அஞ்சலிக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. [வி]


# YARL HALL

**93A, MAIN STREET, Jaffna.**

**கல்விஆண்டு 1991க்குரிய ஆண்டு9, 10,11 வகுப்புகள்**

ஆரம்பம்:
28-01-1991 திங்கள்
மாலை 3-00 மணி

| | |
|---|---|
| விஞ்ஞானம்: | திரு. இரா. செல்வவடிவேல் |
| கணிதம்: | திரு. சண் |
| தமிழ்: | திரு. S. கதிர்காமத்தம்பி |
| வர்த்தகம்: | திரு. அகஸ்ரின் |

ஏனைய பாடங்களும் ஆரம்பமாகின்றன. (சி 4292)


## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சங்கரப்பிள்ளை அம்பிகைபாகன் அவர்கள்



சிந்தாகுலம் தந்த
ஐந்தாம் ஆண்டு இன்று.
எம் தலைவா நும்
சிந்தனையிலே வந்தனை
செய்கின்றோம்;
மனை மணிப்பாகனே,
தனியாதெம் நினைவு:
அம்பிகை எம் பிரானே
எம் நெஞ்சில் வாழ்க
நிரந்தரம்;

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(ஏ 990)


# போட்டோ ஸ்ரற்

நல்லூரில்
தரமான, தெளிவான போட்டோ ஸ்ரற் பிரதிகளுக்கும், கறுப்பு வெள்ளை புகைப்படங்களுக்கும் நாடுங்கள்:-

**சித்ராலயா,**

351, கோவில் வீதி, நல்லூர்.
(கோவில் பின் வீதியில், கம்பன் கோட்டம் முன்பாக)
(ஏ 1059)

### வில்லியம் ஹார்வே ஞாபகார்த்த மருத்துவமனை

பொது மக்களின் நலன்கருதி மீண்டும் செயலாற்ற முன்வந்துள்ளது வில்லியம் ஹார்வே ஞாபகார்த்த மருத்துவமனை. வைத்திய நிபுணர்களின் ஆலோசனை பெறவும் ஆய்வுகூட மருத்துவப்பரிசோதனைகளுக்கும் தரமான சிகிச்சைகளுக்காகவும் இரவு பகல் சேவையை 1991 ஜனவரி 26ம் திகதி முதல் வில்லியம் ஹார்வே ஞாபகார்த்த மருத்துவமனை மீண்டும் செயலாற்ற முன்வந்துள்ளது.

**WILLIAM HARVEY MEMORIAL HOSPITAL**
17, KANDY ROAD, CHUNDIKULI,
JAFFNA. (சி-1061)

# தொழிற் பயிற்சிகள்

★ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்.
சகல வின றேடியோ, ரெலிவிசன். வீடியோ டெக் திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம் 4 மாதம்

★ றீவைண்டிங்
மின்மோட்டார், மின்விசிறி, ரான்ஸ்போமர் டைனமோ றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும். காலம் 4 மாதம்

★ எலக்ரிக்கல் வயறிங்
வீட்டு மின்சார வேலை, மின்சாரப் பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
காலம் 2 மாதம்

★ SPOKEN ENGLISH

| | |
|---|---|
| (1) Vocabulary | (4) Writting |
| (2) Basic Grammar | (5) Conversation |
| (3) R.ading | (6) Etiguette (Manners) |

★ TOEFL
காலம் 2 மாதப் பிரத்தியேகமாக தனிப்பட்ட மாணவர்களுக்கும் குறுகியகாலத்தில் பயிற்சியளிக்கப்படும்.

★ எயர் கொண்டிசன் றிப்பியறிங்
சகல குளிர்சாதனங்களும் திருத்தப்படும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம் 4 மாதம்

புதிய பயிற்சிகள் ஆரம்பம்:
27-01-91 (சனி, ஞாயிறு)
28-01-91 (கிழமை)

தொழில் புரிவோருக்கு விசேட சனி, ஞாயிறு வகுப்புகள் நடாத்தப்படும்.

**JAFFNA TECHNICAL INSTITUTE**
ஸ்ரான்லி வீதி,
(றெயில்வே கடவை அருகாமை மேல்மாடி)
யாழ்ப்பாணம்.
(ஏ 1055)

## மருந்து அவசியம்

எப்படியோ மது வந்து சேர்ந்துவிட்டது! காலம் கெட்ட வேளையிலும், ஒரு சிலருக்குப் பஞ்சத்திலும் விருந்துக்குப் பஞ்சமே இல்லை. தேவையில் படுக்கையில் விழுந்து துடிக்கும் நோயாளர்க்கோ, அவசியம் தேவைப்படும் மருந்துகளோ நித்தப் பஞ்சம் நீடித்துக் கொண்டே போகிறது!

மருந்தோ, விருந்தோ எதற்கும் நாமாகவே முந்திச் செயற்படுவது அவசியம்!

ஆயிரத்தெட்டுப் பிரச்சனைகளின் மத்தியிலும் ஒன்றுபட்டு முயற்சித்ததன் பயனாக யாழ். போதனா வைத்தியசாலை திறந்து வைக்கப்பட்டு, ஆயிரமாயிரம் நோயாளிகளின் அவலமும், தவிப்புக்களும் தணிக்கப்பட்டு ஆறுதல் காணப்பட்டுள்ளது.

ஆறு மாதங்களுக்கு மேலாக அத்தியாவசிய மருந்துகளுக்கும், உணவுப் பொருள்களுக்கும், திட்டமிட்ட, பொருளாதாரத் தடை விதித்து, பாதிப்புக்களை உண்டு பண்ணிய அரசு, தங்கு தடையின்றி மருந்துகளையும், உணவுகளையும் வழங்கிவிடும் அளவுக்கு நாட்டு நிலைமை சீரடைந்துவிட்டது என்று நாம் நினைப்பது தவறு!

எனவே, தனியார் மருத்துவ மனைகள் சங்கமும், அரச, உயர் அதிகாரிகளும் செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் - அரச முப்படைத் தலைமை அலுவலகத்துக்கும், அரசுக்கும் நித்தம தொந்தரவை முடுக்கிவிடுவதன் மூலமே காரியத்தைச் சாதிக்க முடியும!

பலவேறு நிலைமைகளிலும் நித்த நோயாளிகளாக்கப்பட்ட தமிழ் இனத்துக்கே வைத்தியனும், மருந்தும் அவசியம் தேவை!

மருந்தோ - அல்லது மருந்துக்கு நிகரான உணவுப் பண்டங்களோ நாம் தேடி அலைந்து பெறவேண்டிய காலச் சூழ்நிலைக்கு எல்லோரும் தள்ளப்பட்டுள்ளதை நினைவிற்கொண்டு 'குறம் காணும்' மனோபாவத்தை விட்டொழிய வேண்டும்!

'குற்றம் காணின்
சுற்றம் இல்லை'

இதனை மனதிற்கொண்டு சம்பந்தப்பட்ட அனைவரும் காலம் தாழ்த்தாது முடிந்தளவு தொடர்ந்து முயன்றால், ஆகாத காரியமும் கைகூடிவிடும்!

விருந்துக்குக் காலதாமதம் காட்டலாம்! மருந்துக்குக் காலதாமதம் செய்தால் காலதேவன் தன் கணக்கை முடித்து விடுவான் - கவனம்!

— மயூரன்

# உ. அ. அதிபர், கிராமசேவகர் கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர்கள், கிராம சேவையாளர்கள் கலந்துகொள்ளும் கலந்துரையாடல் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் மட்டத்தில் நடத்தப்படவுள்ளன.

பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய இடங்களுக்கு நாளை 27-ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியிலும், யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் ஆகிய இடங்களுக்கு இம்மாதம் 29-ம் திகதி பி. ப. 2 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும், சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய இடங்களுக்கு இம்மாதம் 31-ம் திகதி வியாழன் பி. ப. 2 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையிலும், தெல்லிப்பழை, உடுவில் பகுதிகளுக்கு அடுத்த மாதம் 1-ம் திகதி பி. ப. 2 மணிக்கு சுன்னாகம் நாகம்ஸ் படமாளிகையிலும், சாவகச்சேரி, பளை ஆகிய பகுதிகளுக்கு அடுத்த மாதம் 4-ம் திகதி பி. ப. 2 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும், நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளுக்கு அடுத்த மாதம் 5-ம் திகதி பி. ப. 2 மணிக்கு வேலணை மகாவித்தியாலயத்திலும் இக்கலந்துரையாடல நடைபெறவுள்ளது. (வி)

## குளிர்த்தி உற்சவம்

[அராலி]

அராலி முத்துமாரி அம்மன் கோவில் தை மாத குளிர்த்தி இன்று நடைபெறுகிறது. (எஸ்)

### ஈராக்கின் கட்டுப்பாட்டிலிருந்த

# சிறுதீவை நேசநாட்டுப் படைகள் கைப்பற்றின

(பாக்தாத்)

★ வடக்கு வளைகுடாவில் ஈராக் கைப்பற்றியிருந்த சிறு தீவு ஒன்றை, அமெரிக்க நேசநாட்டுப் படைகள், பல மணிநேர மோதலின் பின்னர் மீண்டும் கைப்பற்றியுள்ளன.

★ அமெரிக்க விமானப்படை தாக்குதலில் 231 பொது மக்கள் கொல்லப்பட்டிருப்பதாக ஈராக் அறிவித்துள்ளது.

★ போர் நிறுத்தம் ஒன்றை கொண்டுவரவேண்டும் என்று ஐரோப்பிய பாராளுமன்றம் தீர்மானம் செய்துள்ளது.

★ வளைகுடாவில் மீண்டும் அமைதியை ஏற்படுத்துவதற்காக ஈரான் வெளிவிவகார அமைச்சருடன் பேச்சு நடத்துவதற்கு இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. சுக்லா, டெஹ்ரான் சென்றுள்ளார்.

## யுத்தக்கப்பல்கள் மீது ஈராக் தாக்குதல்

★ ஈராக் முதல் தடவையாக, வளைகுடாவிலுள்ள அமெரிக்க நேச படைகளின் விமானம்தாங்கி கப்பல்கள் மீது விமானத் தாக்குதல் நடத்தியது. நேச நாட்டு படைகள் எதிர்த்தாக்குதல் நடத்தியபோது மூன்று ஈராக் விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டது. 29 ஈராக் படையினர் சிறைப் பிடிக்கப்பட்டனர்.

★ ஈராக்கின் இரு மிராஜ் போர் விமானங்களை சவூதி அரேபியா படையினர் சுட்டு வீழ்த்தியுள்ளனர்.

## 172 விமானங்கள் சுடப்பட்டன

★ அமெரிக்க நேசப் படைகளின் 172 விமானங்களை கடந்த 9 நாள் போரில் சுட்டு வீழ்த்தியுள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது.

★ ஈராக்கிய தாக்குதலினால் காயமடைந்த சவூதி அரேபியா நோயாளிகளையும், அகதிகளையும் எகிப்துக்கு எடுத்துச் செல்வதற்கு 5 போக்குவரத்து விமானங்களை ஜப்பான் சவூதிஅரேபியாவுக்கு வழங்கியுள்ளதாக டோக்கியோ வானொலி நேற்று தெரிவித்தது. (க)

★ ஈராக்கிய தரைப்படையினர் சவூதி அரேபியாவின் எல்லைக்குள் ஊடறுத்து முன்னேறிச் செல்வதாக ஈராக் தொலைக்காட்சி அறிவித்துள்ளது.

★ பாலைவனப் புயல் யுத்தம், திட்டமிட்டபடி வெற்றிகரமாக முன்னேறிவருகின்றது. எவரும் இதுகுறித்து பதட்டம் அடையவேண்டியதில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. புஷ் நேற்று தொலைக்காட்சியில் தோன்றி உரைநிகழ்த்துகையில் வலியுறுத்தினார்.

★ வளைகுடாப் போரினால் மத்திய கிழக்கில் சிக்கித்தவிக்கும் நாலாயிரம் இலங்கையர் நிலை குறித்து இலங்கை வெளிவிவகார செயலகம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

★ ஈராக்கிய மிகப் பெரிய பொருளாதார கேந்திர நிலையங்கள் மீது பாரிய விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்படும் என அமெரிக்க இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்

★ இதேசமயம் பாக்தாத் மீது மூன்று தடவைகள் மேற்கொள்ளப்பட்ட விமான குண்டுத் தாக்குதலில் அறுபது பேர் வரையில் கொல்லப்பட்டிருக்கலாம் என அமெரிக்க அதிகாரி தகவல் வெளியிட்டார். (க)

# அமெரிக்க, ஈராக் விமானங்கள் ஆகாயத்தில் நேரடி மோதல்

(பாக்தாத்)

ஈராக் யுத்த விமானங்களும் அமெரிக்க போர் விமானங்களும் ஆகாயத்தில் நேரடி மோதல்களை நேற்று ஆரம்பித்தன.

துருக்கி, ஈராக் எல்லைகளுக்கு மேலே இந்த விமானத் தாக்குதல் நடைபெற்றதாக எல்லைப்பகுதியில் வாழும் மக்கள் தெரிவித்தனர்.

துருக்கிக்கு மேலாக இத்தாக்குதல் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

இந்த விமானத் தாக்குதல் பற்றி அமெரிக்கா ஈராக் எதுவும் தெரிவிக்கவில்லை.

### 41 பேர் பலி

அமெரிக்க நேசபடைகளின் தொடர்ச்சியான விமானதாக்குதலால் ஈராக்கில் 41 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், 141 பேர் காயமடைந்ததாகவும் ஈராக் தெரிவித்துள்ளது

அமெரிக்க நேசநாடுகளைச் சேர்ந்த மேலும் 5 போர் விமானங்களை ரொக்கட் சுட்டு வீழ்த்தியுள்ளதுடன் சில விமானிகளையும் கைதுசெய்துள்ளது.

### சமாதான யோசனை நிராகரிப்பு

இந்தியா உட்பட மற்றும் சில நாடுகளின் சமாதான யோசனையை அமெரிக்கா நிராகரித்துள்ளது. குவைத்தை விட்டு முதலில் ஈராக் வெளியேறியபின்னர்தான் அதுபற்றி யோசிக்கலாம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

★ ஜோர்தான் யுத்தநிறுத்தம் ஒன்று அவசியம் எனத் தெரிவித்துள்ளது.

★ இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ்மீது நடந்த தாக்குதலின்பின் இஸ்ரேலிய மந்திரிசபை அவசரமாகக் கூடி நிலைமைபற்றி ஆராய்ந்தது. இச்சம்பவம் பாரதூரமானது என்று இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

## வர்த்தகர்கள் கைது

(நாவற்குழி)

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கம் நிர்ணயித்த விலைகளை மீறி ஒரு சவர்க்காரத்தை 13 ரூபாவாக விற்பனை செய்த சாவகச்சேரி வர்த்தகர் ஒருவரும் ஒரு போத்தல் மண்ணெண்ணெய் 90 ரூபாவாக விற்ற நுணாவிலைச் சேர்ந்த வர்த்தகரும் விடுதலை புலிகளால் கைது செய்யப்பட்டனர். (107)

### நிதிசேகரித்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டனர்.

இச்சம்பவம் வரணிப்பகுதியில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பாக நான்கு இளைஞர்கள் புலிகளால் மேல்விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். (51)

### தி. மு. க.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யுள்ளார்.

ஏற்கனவே இருதடவைகள் காங்கிரஸ் கட்சி மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்திருந்தமைகுறிப்பிடத்தக்கது.

### வீதி மறியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

சுமார் ஏழாயிரம் தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே இவர்கள் கைது செய்யப்படுவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

### படையினரின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வசியப் பொருட்களுடன் கற்பூர வில்லைகளையும் எடுத்து வந்த வடபகுதியைச் சேர்ந்த ஐவரை வவுனியாவில்வைத்து படையினர் சோதனையிட்ட சமயம் கற்பூரப் பைக்கற்றுகள் அவர்களுக்கு தென்படவே உடனே அவற்றை எடுத்துக் கொளுத்திவிட்டு அது அணையுமட்டும் கண்களைமூடி தேவாரம் பாடுமாறு பணிக்கப்பட்டனராம்.

பின்னர் கற்பூரம் அணைந்த பிற்பாடே மேற்கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

## மண்ணெண்ணை பதுக்கல் ஒருவர் கைது

[கொழும்பு]

கண்டியில் கடையொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 225 பரல் மண்ணெண்ணையை பொலிஸார் கைப்பற்றியதுடன் அந்தக்கடை உரிமையாளரின் மகனையும் கைது செய்துள்ளனர்.

### புலிகள் பற்றி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

திரு. கருணாநிதி மேலும் பேசுகையில்:- "போராளிகள் சம்பந்தமான எந்தவொரு முடிவையும், மத்திய அரசின் ஆலோசனையுடனே மேற்கொண்டுவந்ததாகவும், இலங்கைத் தமிழர் விடயத்தில் தீர்க்கமான நல்ல ஒரு முடிவை எடுக்கவேண்டும்" என்றும் கூறினர். (வீ)

### நிர்ணயிக்கப்பட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மெண்ணை 30 ரூபா வீதம் வழங்கப்பட்டது. யாழ் நகரில் சீனியும் நிர்ணயிக்கப்பட்ட விலையில் வழங்கப்பட்டது நல்லூர் கந்தசாமி கோவில் முன்பாக உள்ள வர்த்தக நிறுவனமொன்றில் சன்லைற், லக்ஸ் சவர்க்காரங்கள் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்பனை செய்யப்பட்டது. (ஈ)

### அமெரிக்க

(1ம் பக்க தொடர்ச்சி]

மாத காலம் நீடிக்கும் என்று வெள்ளைமாளிகை நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இப்போரில் ஈராக் சிலவெற்றிகளை பெற்றுவருவதை அமெரிக்க மக்கள் ஏற்கத்தயாராக இருக்கவேண்டுமென்று அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

இப்போரில் எதிர்பார்த்தது போல் ஈராக் பெரும் பாதிப்பு அடையவில்லை என ஜனாதிபதி புஷ் கவலை தெரிவித்துள்ளார். (மா)

## மேலதிக அரச அதிபர்கள்

(கொழும்பு)

திருமலை, அம்பாறைமாவட்டங்களுக்கு மேலதிக அரசாங்க அதிபர்களாக தமிழரும், முஸ்லிமும் நியமிக்கப்படவிருக்கிறார்கள்.

தமிழ், முஸ்லிம் மக்களின் நன்மைகருதி இவ்விரு மாவட்டங்களுக்கும் தமிழ், முஸ்லிம் அரசாங்க அதிபர்களை நியமிக்குமாறு வணிக, வர்த்தகத்துறை அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூர், ஜனாதிபதியிடம் கோரியிருந்தார்.

இதைத் தொடர்ந்து ஜனாதிபதி இவ்விரு மாவட்டங்களுக்குத் தமிழ், முஸ்லிம் அரச அதிபர்களை மேலதிகமாக நியமிக்குமாறு பொதுநிர்வாக அமைச்சரைப் பணித்துள்ளார்.

## பொது இடங்களில் பதுங்கு குழிகள்

(கிளிநொச்சி)

விமானத் தாக்குதலினால் ஏற்படும் அபாயத்திலிருந்து மக்களைப் பாதுகாக்க மக்கள் கூடும் பொது இடங்களிலும் பதுங்கு குழிகள் அமைக்கப்படவேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் திரு. கோபி தெரிவித்துள்ளார்.

### விமானத் தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட தாக்குதலில் புஸ்பவதி (வயது 32) என்ற இளம் பெண் காயமடைந்துள்ளார். (வி-க)

### போலியோ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

7-ம், 18-ம் மாதங்களில் போடப்படும் போலியோ முக்கூட்டு ஊசி மருந்துவகை யாவும் நேற்றுடன் முடிவடைந்து விட்டன. (ஈ)